# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2020–ம் வருடம் அக்டோபர் மாதம் 20–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட மருந்துக்கோட்டை உரக்கிடங்கு பகுதியில் புதிய நவீன எரிவாயு தகன மேடை அமைக்க கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடுகள் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Gasifier crematorium at Municipal Burial Ground in Padmanabhapuram Municipalitiy. | 78.00 |

மேற்படி பணிகள் மேற்கொள்ள முழு திட்ட நிதி கோரி மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டு 26/02/2019 அன்று நடைபெற்ற **5 th Empowered Committee for capital grant fund and O & M Gap Filling Fund 2019-2020-ன்** ஆய்வு கூட்டத்தில் பத்மனாபபுரம் நகராட்சியில் மேற்படி பணி மேற்கொள்வதன் அவசியத்தினை கருத்தில் கொண்டு மூலதன மானிய நிதி 2019-2020-ன் கீழ் ரூ. 70.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தொழில் நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மதிப்பீட்டுத் தொகை ரூ.78.00 இலட்சத்தில் செயல்படவிருக்கும் இத்திட்டத்தில் கருவேல மரத்தினை பயன்படுத்தும் வகையில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி தற்போது கருவேல மரத்தின் தட்டுப்பாடு மற்றும் காடு அழித்தல் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு இப்பணிக்கு Bio Gasifier Crematorium -க்கு பதிலாக **LPG Gas (Liquified Petroleum Gas )** பயன்படுத்தி இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த ரூ.90.00 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளவும் இந்நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டும் மூலதன மானிய நிதி 2019-2020-ன் கீழ் முழு மானிய நிதியாக ரூ 90.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது...

**(ந.க.எண். 775/2019/இ1)**
**<u>மன்றத் தீர்மான எண்.1710</u>**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

2)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் (ODF+) இல்லாத நகராட்சியாக அறிவித்திட 15.10.2020 க்குள் நடவடிக்கை மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலக மின்னஞ்சல் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மீது நடவடிக்கையாக தனி அலுவலர், பத்மனாபபுரம் நகராட்சி, அனைத்துப் பள்ளிகள், மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இருப்பிட சமுதாய நலச்சங்கங்கள் (RWA) ஆகியவர்களிடம் 21 வாடு பகுதிகளிலும் திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத நகராட்சி என உரிய உறுதிமொழி படிவங்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் ஆலோசனை மற்றும் ஆட்சேபனையினை பொதுமக்களிடம் இருந்து பெறுதல் குறித்து விளம்பரப்படுத்தும் விதத்தில் 31.10.2020 முதல் தொலைக்காட்சி வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், திடக்கழிவு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் LCV வாகனங்களின் மூலம் ஒலிபரப்பும் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் அனைத்து வீடுகளிலும் தூய்மை இந்தியா திட்ட இலக்குப்படி தனி நபர் கழிப்பிடங்கள் (IHHL) மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் (CT) கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தறபோது நகரின் 21 வார்டுகளுக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் கழிப்பிடங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே மேற்படி நடவடிக்கையின் அடிப்படையில் இந்நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி என அறிவித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**(00657/2015/அ2)**

<u>மன்ற தீர்மான எண். 1711</u>

அனுமதிக்கப்பட்டது.